## வண்ணாரப்பேட்டை-விம்கோ நகர் இடையே

# 2020 ஜூனில் மெட்ரோ ரயில் சேவை




சென்னை, மே 6: வண்ணாரப்பேட்டை-விம்கோ நகர் வரையிலான மெட்ரோ ரயில் வழித்தடம் 2020 ஜூன் மாதம் மக்களின் பயன்பாட்டிற்கு வரும் என மெட்ரோ ரயில் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சென்னையில் 45.1 கி.மீட்டர் தூரத்தினாலான முதல் வழித்தட மெட்ரோ ரயில் திட்டம் முழுமை பெற்று தற்போது பொது மக்களின் பயன்பாட்டிற்காக செயல்பட்டு வருகிறது. தற்போது இரண்டாம் வழித்தட திட்டத்திற்கான மண் தர பரிசோதனை, நில ஆர்ஜிதம் உள்ளிட்ட பணிகளை மெட்ரோ ரயில் நிர்வாகம் பெரும்பாலும் முடித்துவிட்டது.

இந்நிலையில், முதல் வழித்தட திட்டத்தின் நீட்டிப்பான வண்ணாரப்பேட்டையில் இருந்து திருவொற்றியூர் விம்கோ நகர் வரையிலான பணிகளை தற்போது மெட்ரோ ரயில் நிர்வாகம் முடுக்கிவிட்டுள்ளது. மேம்பாலம் வழியாக 9.2 கி.மீட்டர் தூரத்திற்கு விம்கோ நகர் வரை நடைபெறும் இப்பணியை விரைவில் முடிக்க நிர்வாகம் திட்டமிட்டுள்ளது. அதன்படி, 2020 மே மாதத்திற்குள் பணிகளை முடித்து ஜூன் மாதத்தில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வரும் என மெட்ரோ ரயில் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து மெட்ரோ ரயில் அதிகாரிகள் கூறியதாவது:

வண்ணாரப்பேட்டையில் இருந்து திருவொற்றியூர் விம்கோ நகர் வரை மெட்ரோ ரயில் நீட்டிப்பு பணிகள் ₹3 ஆயிரத்து 770 கோடியில் நடந்து வருகிறது. மொத்தம் 9 ரயில் நிலையங்கள் வர உள்ளன. நீட்டிப்பு பணிகளில் சர் தியாகராயர் கல்லூரி நிலையம் மற்றும் கொருக்குப்பேட்டை நிலையம் ஆகிய 2 ரயில் நிலையங்கள் மட்டும் சுரங்கப்பாதையில் அமைகிறது. மற்ற ரயில் நிலையங்கள் மேம்பாலம் வழியாக அமைகிறது.

முதல் திட்டம் கடந்த பிப்ரவரி மாதத்துடன் முடிக்கப்பட்டதையடுத்து விம்கோ நகர் வரையிலான நீட்டிப்பு பணிகள் 2020 மே மாதத்திற்குள் முடிக்கப்பட்டு ஜூன் மாதம் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். பணிகளை விரைவில் முடிக்கும் நோக்குடன் நவீன இயந்திரங்களுடன் பணிகள் நடந்து வருகிறது. 2022ம் ஆண்டு வரை கால அவகாசம் இருந்தாலும் இது 2020க்குள் முடித்து மக்களின் பயன்பாட்டிற்கு வரும். இவ்வாறு கூறினர்.